**தலைப்பு – 411 – நகர அபிவிருத்தி, கழிவுப்பொருள் அகற்றுகை மற்றும் சமூதாய தூய்மைப்படுத்தல் இராஜாங்க அமைச்சு**

---

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

நகர அபிவிருத்தி, கழிவுப்பொருள் அகற்றுகை மற்றும் சமுதாய தூய்மைப்படுத்தல் இராஜாங்க அமைச்சின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் நகர அபிவிருத்தி, கழிவுப்பொருள் அகற்றுகை மற்றும் சமுதாய தூய்மைப்படுத்தல் இராஜாங்க அமைச்சின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் உள்ளடங்கிய பொழிப்பு அறிக்கை 2022 மே 31 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் அமைச்சு தொடர்பான வருடாந்த விரிவான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2022 நவம்பர் 10 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்

இவ் அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களில் இருந்தான தாக்கத்தை தவிர்த்து 2021 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறான நகர அபிவிருத்தி, கழிவுப்பொருள் அகற்றுகை மற்றும் சமுதாய தூய்மைப்படுத்தல் இராஜாங்க அமைச்சின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச்செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாகக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமான உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் அமைச்சினால் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கக் கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் முறையாகப் பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்துதல் வேண்டியதுடன், அம்முறைமையின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களில் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன், அதன் பொருண்மை தன்மையை இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் எடுக்கப்படும் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்பட வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றை பெற்றுக் கொள்ளும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும், நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும்

உள்ளடக்கப்பட்டுள்ளதாக, எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டது.

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் கடந்த வருடத்துடன் இணங்குவதாக,

(ஆ) முன்னைய ஆண்டிற்கு உரியதாக நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் என்னால் முன்வைக்கப்பட்டிருந்த பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தது.

## 1.6 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரை

### 1.6.1 கணக்கீட்டு குறைப்பாடுகள்

**(அ) மூலதன செலவினம்**

நிதிக் கூற்றுக்களுக்கு தொடர்புடைய மூலதன செலவினங்கள் கணக்கிடும் போது பின்வரும் குறைப்பாடுகள் அவதானிக்கப்பட்டது.

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | அமைச்சிளால், ஏனைய மூலதன சொத்துக்கள் கீழ் உள்கட்டமைப்பு வசதி அபிவிருத்தி செலவின விடயம் (2506) இன் கீழ் 2021 ஆம் ஆண்டினுள் ரூபா 8,280.18 மில்லியன் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக செலவிடப்பட்டிருந்தது. எனினும் அம் மூலதன செலவினம் ஏற்றதினால் எழுந்த சொத்துக்கள் அல்லது நடைமுறையிலுள்ள வேலைகள் தொடர்பாக நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | மூலதன செலவினத்தின் ஊடாக எழுகின்ற சொத்துக்கள் அல்லது நடைமுறையிலுள்ள வேலைகள் எவ்வளவு என அடையாளப்படுத்திக் கொள்வதற்காக பொது திறைச்சேரியினால் அறிமுகப்படுத்திக் கொடுத்துள்ள கணக்கீட்டு முறைமையில் வெளிப்படுத்தும் வசதி இதுவரையில் வழங்கப்பட்டிராததுடன் தற்போது செயற்படுத்தப்படுகின்ற கணக்கீட்டு முறைமையின் பிரகாரம் வெளிப்படுத்தல்கள் கணக்குகளில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. | பொது திறைச்சேரியுடன் கலந்துரையாடி பொறுத்தமான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ii) | அமைச்சின் உள்கட்டமைப்பு அபிவிருத்தி இன் கீழ் மேற்கொள்ளப்படுகின்ற அபிவிருத்தி செயற்திட்டங்கள் அமைச்சின் வெவ்வேறு பிரிவுகளின் கீழ் செயற்படுத்தப்படுகின்றதுடன் அப் பணிகள் ஆரம்பிப்பதற்காக ஒப்பந்தக்காரர்களுக்கு பெற்றுக் கொடுக்கின்ற பணி தொடக்க முற்பணம் செலுத்தல் நேரடியாக ஒவ்வொரு உப | முற்பண உத்தரவாதம் பெற்றுக் கொள்ளப்பட்டு கொடுப்பனவு செய்யப்பட்ட சந்தர்ப்பத்திலேயே குறித்த செலவின விடயத்தில் செலவீனமாக கணக்கிடப்பட்டு, ஒரு ஆண்டிற்கு மேலதிகமாக செயற்படுத்தப்பட்டு வருகின்ற செயற்திட்டங்களில் கணக்காண்டு இறுதியில் | பொது திறைச்சேரியுடன் கலந்துரையாடி பொறுத்தமான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | |
|---|---|
| செலவின விடயங்களுக்கு வரவு வைக்கப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது. எனவே, 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அமைச்சின் கீழ் செயற்படுத்தப்படுகின்ற 50 உப செயற்திட்டங்களுக்கு பெற்றுக் கொடுக்கப்பட்ட பணி தொடக்க முற்பணம் ரூபா 848.32 மில்லியனில் 2021 திசெம்பர் 31 இல் அறவிடப்படாத ரூபா 649.97 மில்லியன் நிதிக் கூற்றில் மூலதன செலவீனமாக கணக்கிடப்பட்டிருந்தது. இந்த தொகை தனியே அடையாளப்படுத்திக் கொள்ளக் கூடிய வகையில் ஒப்பந்த கொடுபப்னவு பதிவேடு பேணிச் செல்லப்பட்டிருக்கவில்லை. | தீர்க்கப்படாத முற்பணம் கணக்கு அறிக்கைகளில் காண்பிப்பதற்காக திறைச்சேரியின் பிரதான பேரேட்டு கணக்குகளில் தனியே பெறப்பட வேண்டிய தொகையாக கணக்கிடும் வசதி தற்போதுள்ள கணக்கீட்டு முறைமையின் பிரகாரம் சீராக்கும் திறன் இல்லையென குறிப்பிட விரும்புகின்றேன். |

**(ஆ) ஆதனம், பொறி மற்றும் உபகரணம்**

ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் கணக்கிடும் போது பின்வரும் குறைப்பாடுகள் வெளிப்படுத்தப்பட்டது.

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | அமைச்சின் வாகன பட்டியலின் பிரகாரம் அமைச்சிற்கு சொந்தமாக 19 வாகனங்கள் காணப்பட்டதுடன் அவற்றின் மதிப்பீட்டு பெறுமதியான ரூபா 153.57 மில்லியன் கணக்கிடும் போது ரூபா 4.5 மில்லியன் குறைவாக குறிப்பிடப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | அமைச்சிற்கு சொந்தமான வாகனங்களின் 2021 மதிப்பீட்டு பெறுமதியின் பிரகாரம் ரூபா 4 மில்லியன் என காண்பிக்கப்பட்டிருந்த வாகனம் ரூபா 7 மில்லியன் என மதிப்பிடப்பட்டிருந்தது. அவ் வாகனம் சொத்தாக உள்ளடக்கப்பட்டது 2017 ஆம் ஆண்டில் என்பதனால் நிதி மற்றும் வெகுஜன அமைச்சின் 04/2018 ஆம் இலக்க 2018 திசெம்பர் 31 திகதிய சொத்துக்கள் சுற்றறிக்கையின் பிரகாரம், வாகனங்கள் மதிப்பிடல் ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு முறை மேற்கொள்ளப்பட வேண்டுமென்று பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ள ஆலோசனைகளுக்கு அமைவாகவென சுட்டிக் காட்டுவதற்கு விரும்புகின்றேன். | சொத்துக்களின் கூட்டுத்தொகை நிதிக் கூற்றுக்களினுள் சரியாக காண்பிக்கப்படல் வேண்டும். |

**(இ) சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான இணங்காமைகள்**

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாண ஏற்பாடுகளுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து தரப்படுகின்றன.

| அவதானிப்புக்கள் | | | | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| | **சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு** | **பெறுமதி ரூபா. மில்லியன்** | **இணங்காமை** | | |
| (i) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை நி.பி 104(4) | 1.05 | 03 வாகனங்களுக்கு ஏற்பட்ட விபத்துக்கள் தொடர்பாக நி.பி பிரகாரம் இறுதி பரிசோதனை மேற்கொண்டு பொறுப்பு கூற வேண்டியவர்கள் உறுதி செய்யப்பட்டிராததுடன் ஒரு வாகனம் 2021 செப்தெம்பர் 21 ஆந் திகதி விபத்து ஏற்பட்டிருந்த போதிலும் ஏற்பட்ட நட்டம் மதிப்பிடப்பட்டு அந் நட்டத்தினை தீர்ப்பதற்கு விபத்து ஏற்பட்டு 08 மாதங்கள் கடந்திருப்பினும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2021 ஆம் ஆண்டில் நாட்டில் நிலவிய கொவிட் தொற்று நிலை, தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டங்களினால். பழுதுபார்த்தல்கள் மேற்கொண்டு காப்புறுதி நிறுவனங்கள் ஊடாக கொடுப்பனவு செய்யப்பட்டதன் பின்னர் நி.பி 104 (4) பரிசோதனை மேற்கொள்ளப்படல் வேண்டும். மூன்று விபத்திக்களினதும் நி.பி 104 (4) அறிக்கை சமர்ப்பித்தல் தாமதமாகியது. இப் பரிசோதனைக்குரியதாக நியமிக்கப்பட்ட குழு நி.பி 104 (4) பரிசோதனையை மேற்கொண்டு அறிக்கையை சமர்ப்பித்துள்ளது. | நிதி பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 செலவின முகாமைத்துவம்

வருடாந்த பாதீட்டுகளை தயாரித்தல், நிதிஏற்பாடுகளை மாற்றல், குறைநிரப்பு பாதீட்டின் மூலம் நிதிஏற்பாடுகளைப் பெற்றுக்கொள்ளல் மற்றும் பயன்படுத்துதல், நிதிஏற்பாட்டினை பயன்படுததல் சேமிப்புக்கள் தொடர்பாக கண்டறியப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் பின்வருமாறு.

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நி.பி 66 இன் கீழ் 03 செலவின விடயங்களுக்காக மாற்றப்பட்டிருந்த ரூபா 718.5 மில்லியன் ஆன முழுமையான தொகை சேமிக்கப்பட்டிருந்தது. | செலவின விடயங்களுக்காக மேற்கொள்ளப்பட்ட கணிப்பின் அடிப்படையில் நி.பி 66 இன் கீழ் நிதியேற்பாடு ஒதுக்கப்பட்டிருப்பினும் எதிர்பார்க்கப்பட்ட செலவினம் எழாமையினால் நிதியேற்பாடு சேமிக்கப்பட்டிருந்ததுடன், 411-02-03-03-2506 செலவின விடயத்திற்காக ரூபா 757.42 மில்லியன் உறுதிச்சீட்டுக்கள் பெறப்பட்டிருந்த போதிலும் | மதிப்பீடுகள் தயாரிக்கும் போது யதார்த்தமாக கணக்கிடப்படல் வேண்டியதுடன் கட்டுநிதி கோரல் உரிய காலத்தினுள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | கட்டுநிதி பெறப்படாமையினால் உறுதிச்சீட்டுக்கள் செலுத்தப்படாது நிதியேற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. | |
| **(ஆ)** | 07 மீண்டெழும் செலவின விடயங்களின் கீழ் ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 7.06 மில்லியன் மற்றும் 16 மூலதன செலவின விடயங்களின் கீழ் ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 12.50 மில்லியன் தொகையில், ஒவ்வொரு செலவின விடய நிதியேற்பாடுகளில் 20% உம் 96% இடையேயான வீச்சில் என மீண்டெழும் நிதியேற்பாட்டின் மொத்தம் ரூபா 2.83 மில்லியன் மற்றும் மூலதன நிதியேற்பாட்டில் மொத்தம் ரூபா 3,605.04 மில்லியனாக ஒட்டுமொத்த சேமிப்பு ரூபா 3,607.87 மில்லியன் ஆகும். | அவதானிப்புடன் உடன்படுகின்றதுடன் எங்கள் கணக்கு அறிக்கைகளில் காண்பிக்கப்பட்டுள்ள பிரகாரம் பிரதான பல செலவின விடயங்களின் நிதியேற்பாடு சேமிக்கப்பட்டிருப்பது உறுதிச்சீட்டுக்கள் கொடுப்பனவு செய்யப்படாதது போதுமான கட்டுநிதி பெறப்படாத காரணத்தினால் என சுட்டிக் காட்டுவதற்கு விரும்புகின்றேன். | மதிப்பீடுகள் தயாரிக்கும் போது யதார்த்தமாக கணக்கிடப்படல் வேண்டியதுடன் கட்டுநிதி கோரல் உரிய காலத்தினுள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

## 2.2 பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரால் மேற்கொள்ளப்பட வேண்டிய உறுதிப்படுத்தல்கள்

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவின் பிரகாரம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரால் கீழே காட்டப்பட்ட விடயங்கள் தொடர்பாக சான்றுறுதிப்படுத்த வேண்டிய போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு தேவைப்படுகின்ற பிரகாரம் உரிய காலப்பகுதியினுள் அனைத்து கணக்காய்வு ஐயவினாக்களுக்கு பதில்கள் வழங்குவதை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்தப்பட வேண்டிய போதிலும், அறிக்கையின் 3.9 ஆம் பந்தியின் பிரகாரம் கணக்காய்வு ஐயவினாவிற்கு 166 நாட்களை கடந்திருந்த போதிலும் பதில்கள் பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பதில் வழங்கப்படவில்லை. | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 2.3 முற்பண வழங்கல் மற்றும் தீர்ப்பனவு

வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்பட்டுள்ளது.

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2021 நவம்பர் 09 திகதிய D/UD/UDA/2021/005 ஆம் இலக்க கடிதத்தில் மற்றும் 2021 நவம்பர் 16 திகதிய TCDP/PRDA/W/01A ஆம் இலக்க கடிதத்தில் பிடிபன தலகல கட்டம் 1 வீதி அபிவிருத்தி செய்யும் ஒப்பந்தம் முடிவுறுத்தப்பட்ட | பதில் பெற்றுக் கொடுக்கப்படவில்லை. | முற்பணம் மீண்டும் அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

தீர்மானிக்கப்பட்டிருந்தது. மேற்படி செயற்திட்டத்திற்கு தொடர்புடையதாக தீர்க்கப்படாத ரூபா 114.08 மில்லியன் முற்பணம் பணி தொடக்க பிணைமுறி ஊடாக பெற்றுக் கொள்வதற்கு அவ் ஒப்பந்தக்காரரின் வங்கியிடமிருந்து 2022 செப்தெம்பர் 15 ஆந் திகதி கோரப்பட்டிருந்த போதிலும் 2022 செப்தெம்பர் 27 ஆம் திகதி வணிக மேல் நீதிமன்றத்தினால் நிராகரிக்கப்பட்டமை செப்தெம்பர் 27 ஆந் திகதியே தெரிவிக்கப்பட்டிருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 எதிர்பார்க்கப்பட்ட வெளியீட்டு மட்டம் அடையப்படாமை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | தொழிநுட்ப நகர் அபிவிருத்தி செயற்திட்டத்தின் கீழான ஹோமாகம ஹய்லெவல் வீதியிலிருந்து கடுவான சந்தி வரை புதிய நுழைவு வீதி மற்றும் ஹய்லெவல் வீதியினை தொடர்புப்படுத்துவதற்கு ஒப்பந்தம் ரூபா 713 மில்லியனிற்கு வழங்கப்பட்டிருந்தது. பணிகள் ஆரம்பிக்கப்பட்டு 3 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலம் கடந்திருப்பினும் இரு காணித் துண்டுகளின் காணி சுவீகரித்தல் மற்றும் இழப்பீட்டு தொகை மதிப்பிடப்படாமை காரணத்தினால் 50 மீட்டர் அளவிலான வீதி அபிவிருத்தி நடவடிக்கைகள் 2022 பெப்ரவரி 28 ஆம் திகதி தொடக்கம் நிறுத்தப்பட்டிருந்தது. 2022 ஏப்ரல் 19 ஆம் திகதி வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு இந்த வீதி கையளிக்கப்பட்டிருந்த போதிலும் அவ் வீதியின் நிர்மாணிப்பிற்காக ரூபா 540.83 மில்லியன் செலவிடப்பட்டிருந்த போதிலும் பிரதான வீதியுடன் தொடர்புப்படுத்துவதற்கு அப் பூர்த்தி செய்யப்படாத 50 மீட்டரினாலான வீதி பொது மக்கள் பயன்பாட்டிற்கு பயன்படுத்த முடியாதிருந்தது. | பதில் வழங்கப்படவில்லை. | காணி சுவீகரிப்பு சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டு பெறுகை வழிக்காட்டி கோவையின் 2.3.1 (ஆ) பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

### 3.2 செயற்றிட்டத்தை பூர்த்தி செய்யாமல் கைவிடுதல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மேல் மாகாண போக்குவரத்து அபிவிருத்தி செயற்றிட்டத்தின் கீழ் போக்குவரத்து அமைப்பிற்காக முன்மொழியப்பட்டிருந்த 4 இலகு ரயில் தடங்களில் 03, தனியார் பொது மற்றும் பங்குரிமை (PPP) அடிப்படையில் மேற்கொள்வதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. போக்குவரத்து அமைப்பு தொடர்பாக 2017 ஆம் ஆண்டில் சாத்திவள ஆய்வொன்று மற்றும் சமூக தாக்கம் தொடர்பான ஆய்வொன்றிற்காக ரூபா 453.58 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. கெபினட் அங்கீகாரத்தின் பிரகாரம் அமைச்சரவை பெறுகைகள் குழுவினால் 2018 ஆம் ஆண்டில் செப்தெம்பர் மாதம் முதலீட்டாளர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டு முன்மொழிவுகள் சமர்ப்பிப்பதற்கு 6 மாதக் காலம் பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்தது. முன்வந்த 17 முதலீட்டாளர்களின் மீளாய்வு நடவடிக்கைகள் வெளிநாட்டு மதியுரை கம்பனியொன்றிற்கு பெற்றுக் கொடுக்கப்பட்டு ரூபா 45.16 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது. எனினும் அரச கொள்கை தீர்மானத்தின் பிரகாரம் இந்த செயற்றிட்டம் நிறுத்தப்பட்டிருந்ததுடன் இந்த செயற்திட்ட அலுவலகம் 2022 மே 31 ஆம் திகதி வரையில் மூடப்பட்டிருந்தது. செயற்திட்ட அலுவலகத்திற்காக 2017 ஆம் ஆண்டு தொடக்கம் 2020 ஒக்தோபர் மாதம் வரை ரூபா 196.65 மில்லியன் அமைச்சினால் செலவு செய்யப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் மொத்தமாக ரூபா 695.39 மில்லியன் செலவினம் விளைவற்றதாக காணப்பட்டது. | பதில் வழங்குவதற்கு கால அவகாசம் கோரப்பட்டுள்ளது. | செயற்றிட்டம் திட்டமிடப்பட்ட பிரகாரம் செயல்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |

### 3.3 பணம் விடுவிக்கப்பட்டிருந்த போதும் செயன்முன்னேற்றம் அடையப்படாத செயற்திட்டங்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பிடிபன தலகல கட்டம் 1 வீதியினை அபிவிருத்தி செய்வதற்கு காணியினை சுவீகரித்துக் கொள்வதற்காக உரித்துள்ள தரப்பினருக்கு இழப்பீடு செலுத்தும் பெறுமதி மதிப்பிடப்பாது ஒப்பந்தக்காரருக்கு 2018 ஒக்தோபர் 26 ஆந் திகதி ரூபா 562.87 மில்லியனிற்கு ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்ததுடன் 2019 மார்ச் | பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை. | காணி சுவீகரிப்புச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைய நடவடிக்கை எடுக்கப்பட்டு ஒப்பந்தம் பெற்றுக் கொடுத்தல் தொடர்பாக பெறுகை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். (பெறுகைகள் |

| | | |
|---|---|---|
| 06 மற்றும் 2020 நவம்பர் 27 ஆம் திகதி மொத்தம் ரூபா 114.08 மில்லியனான பணி தொடக்க முற்பணம் செலுத்தப்பட்டிருந்தது. அண்ணவளவாக 4 ஆண்டுகள் கடந்திருப்பினும் காணியினை சுவீகரித்தல் மற்றும் இழப்பீட்டினை செலுத்துவதற்கு நடைமுறையொன்றினை பின்பற்றப்படாமையினால் பிரதேசவாசிகளிடமிருந்து ஏற்பட்டிருந்த எதிர்ப்பின் அடிப்படையில் ஒப்பந்த நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு முடியாத நிலையில் செய்றதிட்டம் முடிவுறுத்தப்பட்டிருந்தது. | | வழிக்காட்டி காவையின் 2.3.1 (ஆ) பிரிவின் பிரகாரம்) |

## 3.4 ஏனைய அவதானிப்பு

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பாரிய கொழும்பு வெள்ள கட்டுப்பாடு செயற்திட்டத்தின் கீழ் தியவண்ணா ஓயாவினை விரிவாக்குவதற்கு காணி சுவீகரிக்கும் போது இழப்பீடு செலுத்தல் தாமதமாகியதன் காரணத்தினால் சுவீகரித்திருந்த ஒரு காணிக்கு உரித்துடைய வெளிநாட்டு கம்பனியொன்றினால் முதலீட்டு சிக்கல்களை தீர்ப்பதற்கான சர்வதேச நிலையத்தில் இலங்கை அரசிற்கு எதிராக 2016 யூலை 07 ஆம் திகதி வழங்கு தாக்கல் செய்யப்பட்டிருந்தது. தாக்கல் செய்யப்பட்ட வழக்கிற்காக வெளிநாட்டு சட்ட ஆலோசகர்களின் உதவியை பெற்றுக் கொள்வதற்காக மற்றும் அதற்கு முன்வந்த சட்டமா திணைக்கள உத்தியோகத்தர்களின் வெளிநாட்டு பயண செலவினங்களும் உள்ளடங்கலாக மொத்த செலவினம் ரூபா 405 மில்லியன் ஆக காணப்பட்டதுடன் இந்த பெறுமதியினுள் இலங்கை காணி அபிவிருத்தி கூட்டுத்தாபனத்திற்கு 2021 திசெம்பர் 31 இல் செலுத்தப்பட வேண்டிய ரூபா 25.58 மில்லியனும் காணப்பட்டது. 2020 மார்ச் 05 ஆந் திகதி மற்றும் 2020 திசெம்பர் 02 ஆந் திகதிய வழக்கு தீர்ப்புக்களின் பிரகாரம் வெளிநாட்டு கம்பனியினால் இலங்கை அரசிற்கு 387,162.34 பவுன் செலுத்த வேண்டியிருந்தது. வெளிநாட்டு கம்பனி இந்த தொகையை செலுத்தாமை தொடர்பில் அத் தொகையை அறவிடுவதற்கு தேவையான நடவடிக்கைகள் 2022 ஒக்தோபர் 31 ஆந் திகதி வரையிலும் அமைச்சினால் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை. | பணம் அறவிடப்படுவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |

**3.5 வருடாந்த செயலாற்றல் அறிக்கை**

2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய 2/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 10.2 ஆம் பந்தியின் பிரகாரம் அரச நிதித் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட 14 ஆம் இலக்க வழிகாட்டியின் பிரகாரம் வருடாந்த செயலாற்றல் அறிக்கை வெளியிடப்பட வேண்டியதாக காணப்பட்டது. அது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2021 ஆம் ஆண்டில் அமைச்சினால் ரூபா 2,000 மில்லியன் நிதியேற்பாட்டின் ஊடாக 30 நடைப்பாதைகள் நிர்மாணிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்ததுடன் அதில் 3 நடை பாதைகள் 2022 யூன் 30 ஆந் திகதி நிறைவு செய்யப்பட வேண்டியதுடன் எஞ்சிய அனைத்து நடை பாதைகளும் 2021 திசெம்பர் 31 ஆம் திகதி நிறைவு செய்யப்பட வேண்டிய போதிலும் 4 நடை பாதைகளின் பணிகள் மட்டும் நிறைவு செய்யப்பட்டிருந்ததுடன் 3 நடை பாதைகளின் பணிகள் இடைநிறுத்தப்பட்டிருந்தன. எஞ்சிய 23 நடை பாதைகளினதும் 2021 திசெம்பர் 31 இல் எதிர்பார்க்கப்பட்ட செயன்முன்னேற்றம் அடையப்படடிருக்கவில்லை. 2021 திசெம்பர் 31 இல் இதற்காக ரூபா 1,385 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. | பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை. | திட்டமிடப்பட்ட பிரகாரம் செயற்திட்டத்தினை நிறைவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | ஒன்பது மாகாணங்களில் செயற்படுத்தப்படுகின்ற நகர அபிவிருத்தி செயற்திட்டத்திற்காக 2021 ஆம் ஆண்டில் ரூபா 3,423 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்ததுடன் அதன் கீழ் 57 உப செயற்திட்டங்கள் செயல்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. 2021 திசெம்பர் 31 இல் ரூபா 2,122 மில்லியன் செலவிடப்பட்டு 52 உப செயற்திட்டங்கள் செயல்படுத்தப்பட்டிருந்ததுடன் அச் செயற்திட்டங்களின் செயன் முன்னேற்றம் பின்வருமாறு.<br>i. மத்திய மாகாணத்தின் கண்டி மாவட்டத்தினுள் 09 செயற்திட்டங்கள் செயல்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் அதில் 03 செயற்திட்டங்கள் செயல்படுத்தப்பட்டிராததுடன் எஞ்சிய 6 செயற்திட்டங்களில் 3 இன் செயன் முன்னேற்றம் 10% உம் 23% இடையே காணப்பட்டது.<br>ii. செயல்படுத்தப்பட்ட 11 செயற்திட்டங்களில் 2021 திசெம்பர் 31 இல் பௌதீக இலக்கினை அடைந்திராத போதிலும் நிதி இலக்கினை மிகைத்து கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த | பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை. | செயல்நடவடிக்கை திட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

செயற்திட்டங்கள் 4 காணப்பட்டதுடன் பௌதிக செயன் முன்னேற்றம் 100% இணை அடைந்திருந்த போதிலும் பணம் ஏதும் செலுத்தப்படாத செயற்திட்டங்கள் 7 காணப்பட்டது.

## 3.6 வெளிநாட்டு உதவித் செயற்திட்டங்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | **இலகு புகையிரத இடப்பெயர்வு செயற்திட்டம்** | | |
| (i) | செயற்திட்டத்தின் ஆண்டு இறுதி வரையில் கையளிப்பதற்கிருந்த 16 மதியுரை அறிக்கைகளில் 11 மட்டும் மதியுரையாளர்களினால் பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்ததுடன் பெறப்பட்ட அறிக்கைகளில் செயற்திட்டத்தினால் 7 அறிக்கைகள் மட்டும் மீளாய்வு செய்யப்பட்டிருந்தன. அதில் 3 மீளாய்வின் பின்னர் செயற்திட்டத்தினால் ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. மதியுரை ஒப்பந்தத்தின் பிரகாரம் தாமதித்திருந்த 5 அறிக்கைகளின் தாமதக் கட்டணம் அறவிடப்படுவதற்கு தொடர்புடைய ஏற்பாடுகள் ஒப்பந்தத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | திட்டத்தின் பிரகாரம் மதியுரை குழு பணிகளை ஆரம்பித்திருக்கவில்லை. | மதியுரை பணிகளுக்கு கொடுப்பனவு செய்வதற்கு முன்னர் அவை சரியாக மேற்பார்வை செய்யப்பட வேண்டியதுடன் ஒப்பந்தங்களில் தேவையான ஏற்பாடுகள் உள்ளடக்கப்படல் வேண்டும். |
| (ii) | சனாதிபதி செயலாளரின் 2020 செப்தெம்பர் 21 திகதிய கடிதத்தில் செயற்திட்டத்தின் உற்பத்தி திறனின் அதிக கிரயம் மற்றும் பாரிய கொழும்பு நகர பிரதேசத்தின் உள்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்துவதற்கு செயற்திட்டம் பொருந்தவில்லையென காரணங்கள் முன்வைத்து வழங்கப்பட்ட கட்டளையின் பிரகாரம் போக்குவரத்து அமைச்சின் செயலாளரினால் கெபினட் பத்திரிக்கையொன்று சமர்ப்பிக்கப்பட்டு இலகு புகையிரத இடப்பெயர்வு செயற்திட்டத்தினை இடைநிறுத்துமாறு கோரப்பட்டிருந்தது. பின்னர் 2020 செப்தெம்பர் 28 திகதிய 20/1450/312/002 ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானத்தின் ஊடாக செயற்திட்டத்தினை செயல்படுத்தும் முகவர் நிறுவனமாக நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் செயலாளருக்கு செயற்திட்டத்தினை இடைநிறுத்துவதற்கு மற்றும் செயற்திட்ட அலுவலகத்தினை | பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை. | செயற்திட்டம் முடிவுறுத்தப்படுவதற்கு முன்னர் முறையான பகுப்பாய்வு ஆய்வொன்று மேற்கொள்ளப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மூடுவதற்கு அமைச்சரவை கட்டளையிட்டிருந்தது. எனினும் ஒப்பந்தமொன்றில் உடன்பட்டு ஆரம்பிக்கப்பட்ட செயற்திட்டம் நிறைவு செய்வதற்கு விஞ்ஞாபனம் சமர்ப்பிப்பதற்கு முன்னர் இது தொடர்பாக சட்டமா அதிபரின் அவதானிப்பு பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிராமை அவதானிக்கப்பட்டது. | | |
| **(iii)** | இலகு புகையிரத இடப்பெயர்வு செயற்திட்டத்திற்காக ரூபா 4,418.32 மில்லியன் செலவிடப்பட்டு மதியுரை அறிக்கைகள் தயாரித்துள்ள நிலையில் சனாதிபதி செயலாளரினால் வழங்கப்பட்ட கடிதத்தின் பிரகாரம் மீண்டும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு மற்றும் தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் ஆலேசனை பெற்றுக் கொண்டு பொருத்தமான மாற்று நடைமுறையொன்று தாபிக்குமாறு தெரிவிக்கப்பட்டிருந்தது. அக் கட்டளையின் அடிப்படையில் 2021 மார்ச் 16 ஆம் திகதி நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சரினால் பொது தனியார் பங்களிப்பு செயற்திட்டமாக “மெட்ரோ புகையிரத வலையமைப்பு” (Metro Railway Network system) என்ற பெயரில் புதிய செயற்திட்ட முன்மொழிவொன்று முன்மொழியப்பட்டுள்ளது. எவ்வாறெனினும் 2021 ஏப்ரல் 06 ஆந் திகதிய 21/0510/306/035 ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானத்தின் ஊடாக பெற்றுக் கொடுக்கப்பட்ட அமைச்சரவை கட்டளையின் பிரகாரம் அச் செயற்திட்ட முன்மொழிவும் வாபஸ் செய்யப்பட்டுள்ளது. | பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை. | மதியுரை அறிக்கைகள், பயனற்ற வகையில் இன்றி பயன்படுத்துவதற்கு மாற்று நடைமுறைகள் அறிமுகப்படுத்தப்படல் வேண்டும். |
| **(iv)** | இந்த செயற்திட்டத்திற்காக 21 ஹெக்டேயார் அளவிலான டிபோ நிர்மாணிப்பதற்கு தேவையான காணியினை சுவீகரிப்பதற்கு காணி சுவீகரிப்புச் சட்டத்தின் 10.1 பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்த போதிலும் 2020 ஆம் ஆண்டு இறுதியில் செயற்திட்ட நடவடிக்கைகள் நிறைவு செய்யப்பட்டதன் பின்னர் 2022 ஆகஸ்ட் வரையிலும் மேல் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை. | காணி தொடர்பாக மேல் நடவடிக்கைகள் எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| **(v)** | கடந்த ஆண்டில் இலகு புகையிரத இடப்பெயர்வு செயற்திட்டத்தின் செயற்பாடுகளை நிறைவு செய்தமையினால் மதியுரை கம்பனிக்கு பெறப்பட வேண்டிய 23.65 மில்லியன் அ.டொலர்கள் உள்ளடங்கலாக 31.36 | பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை. | நியமிக்கப்பட்ட குழுவினால் இது தொடர்பாக விரைவில் கலந்துரையாடப்பட்டு தீர்மானத்திற்கு எழல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மில்லியன் அ.டொலர்கள் நட்டம் கோரப்பட்டிருந்தது. அது தொடர்பாக கலந்துரையாடுவதற்கு 2021 பெப்ரவரி 15 ஆந் திகதி அமைச்சரவையினால் குழுவொன்று நியமிக்கப்பட்டிருந்தது. இந்த குழுவினால் 1 ½ ஆண்டுகள் காலம் கடந்த பின்னர் 2022 ஒக்தோபர் 26 ஆந் திகதி அமைச்சரவைக்கு அறிக்கையொன்று சமர்ப்பித்திருந்ததுடன் அது தொடர்பாக அமைச்சரவை தீர்மானமொன்று 2022 நவம்பர் 10 ஆம் திகதி வரையிலும் பெறப்பட்டிருக்கவில்லை. இவ்வாறு தீர்மானம் எடுப்பதற்கான தாமதம் காரணத்தினால், ஒப்பந்தத்தின் சாதாரண நிபந்தனை இல 6.6 இன் பிரகாரம் தாமதித்த காத்திற்காக வட்டி செலுத்துவதற்கு நேருகின்றமை அவதானிக்கப்பட்டது. | | |
| **(vi)** | கடந்த ஆண்டில் இலகு புகையிரத இடப்பெயர்வு செயற்திட்டத்தினை இடைநிறுத்துவதற்கு எடுத்த தீர்மானத்தின் காரணத்தினால், 2019 மே 23 ஆம் திகதி கைச்சாத்திடப்பட்ட கடன் ஒப்பந்தத்தின் பிரகாரம் முன் இறுதி கட்டணமாக **(Front End Fee)** செலுத்தப்பட்டிருந்த 0.2 சதவீதம் அதாவது 60.08 மில்லியன் யென்னிற்கு சமனான ரூபா 102.73 மில்லியன் விளைவற்ற செலவீனமாக காணப்பட்டது. | பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை. | செயற்திட்டம் நிறைவு செய்வதற்கு தீர்மானிக்கும் போது இந்த கிரயம் தொடர்பாகவும் கருத்திற் கொள்ளபப்படல் வேண்டும். |
| **(vii)** | இலகு புகையிரத இடப்பெயர்வு செயற்திட்டம் கடந்த ஆண்டு இறுதி தொடக்கம் இடைநிறுத்தப்பட்டிருந்த போதிலும், மாலபே தொடக்கம் பத்தரமுல்லைக்கு மாற்றப்படுகின்ற பயன்பாட்டு வீதிக்காக மூலப்பொருட்கள் வழங்கலை ஆரம்பிப்பதற்காக இலங்கை மின்சார சபைக்கு பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ள பணி தொடக்க முற்பணம் ரூபா 36.01 மில்லியன் மற்றும் கொழும்பு நகரத்தினுள் நிலத்தடி பயன்பாட்டு வீதிகள் மாற்றுதல் மற்றும் நிலத்தடி கேபில்களை அமைப்பதற்கு ரூபா 8.09 மில்லியன் 2022 மே மாதம் வரையில் மீண்டும் அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை. | முற்பணம் அறவிடப்படுவதற்கு சரியாக நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

**3.7 உள்நாட்டு நிதியுதவித் திட்டங்களிலிருந்து நடைமுறைப்படுத்தப்படும் செயற்திட்டங்கள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின்/ கணக்கீட்டு உத்தியோகத்தரின கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 14/1030/503/087 ஆம் இலக்க மற்றும் 2014/08/01 திகதி வெளியிடப்பட்ட அமைச்சரவை விஞ்ஞாபனத்தின் பிரகாரம் சுகாதார தரை நிரப்பு செயற்திட்டம் ஆரம்பிப்பதற்கு மற்றும் நாள்தோறும் சேர்க்கப்படுகின்ற 1200 மெட்ரிக் டொன் நகர கழிவுகள் அகற்றுவதற்கு 2015-2016 காலப்பகுதியினுள் செயல்படுத்துவதற்காக 2014 செப்தெம்பர் 05 ஆந் திகதி அமைச்சரவை அங்கீகாரம் பெற்றுக் கொடுத்து ரூபா 14,017 மில்லியன் நிதியேற்பாடு ஒதுக்கப்பட்டிருக்கையில், குறித்த செயற்திட்டம் உரிய வண்ணம் செயல்படுத்தப்படாமையினால் 2017 ஏப்ரல் 14 ஆந் திகதி மீதொடமுல்ல குப்பை மலை சரிந்தமையினால் 32 உயிர்கள் இழக்கப்பட்டமைக்கு காரணமாகியமை வெளிப்படுத்தப்பட்டது. பின்னர் அதற்காக அருவக்காலு சுகாதார குப்பை தேக்க செயற்திட்டம் செயல்படுத்தப்பட்டது. | குறித்த செயற்திட்டம் வில்பத்து தேசிய பூங்காவில் பாதுகாப்பு வலயத்தில் இருப்பதனால் சுற்றாடல் மீளாய்வு அறிக்கைக்காக மத்திய சுற்றாடல் அதிகார சபையிடமிருந்து அங்கீகாரம் பெறப்படவில்லை. இக் காரணத்தினால் அச் செயற்திட்டம் அக் காலத்தினுள் செயல்படுத்துவதற்கு முடியாது போனது. | செயற்திட்டம் திட்டமிடப்பட்ட காலவரையினுள் ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். பொது மக்களுக்கு ஏற்படும் அசௌகரியங்க-ளைத் தவிர்க்க தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | **அருவக்காலு சுகாதார குப்பை தேக்க செயற்திட்டம்** | | |
| (i) | இந்த செயற்திட்டம் விரைவில் நிறைவு செய்ய வேண்டுமென்ற காரணத்தினால் உலக வங்கியால் உடன்பட்ட 700,000 அமெரிக்க டொலர்களான உலக வங்கி உதவியும் இழக்கப்பட்டு பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்த ஒப்பந்தத்தின் முழு செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட பெறுமதி 120 அமெரிக்க டொலர்களாவதுடன் அதன் தேசிய பெறுமதி ரூபா 19,127 மில்லியன் ஆகும். இது 2018 சனவரி 01 ஆந் திகதி ஆரம்பிக்கப்பட்டு 2019 யூன் 30 ஆந் திகதி பூர்த்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் 2021 திசெம்பர் 31 வரையில் இச் செயற்திட்டத்திற்காக ரூபா 18,345.02 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. 02 ஆண்டுகள் கடந்திருக்கையில் செயற்திட்ட காலப்பகுதி 2022 யூலை 31 ஆம் திகதி வரை நீட்டிக்கப்பட்டு அத் திகதி வரை செயற்திட்டத்திற்காக ரூபா 18,601.49 மில்லியன் செலவிடப்பட்டிருந்ததுடன் ரூபா | 2019 ஆம் ஆண்டில் செயற்திட்டத்தின் வடிவமைப்பு மற்றும் நிர்மாணிப்பு பணிகள் பொதுமக்களின் எதிர்ப்பிற்கு மத்தியில் ஆரம்பிக்கப்பட்டது. நாடு மூடப்பட்டிருந்தமை, நிலவிய சுகாதார சட்ட நிலையில் ஒப்பந்தக்காரருக்கு தம் நிர்மாணிப்பு நடவடிக்கைகளை நிறைவு செய்வதற்கு முடியாது போனது. இதற்கு இடையே 2021 நவம்பர் 8 ஆந் திகதி அருவக்காலு செயற்திட்ட வளாகம் நீரில் மூழ்கியமை மற்றும் ஒப்பந்தக்காரரின் உறுதிச் சீட்டுக்களை கொடுப்பனவு செய்வதற்கு | செயற்திட்டத்-தினை நிறைவு செய்வதற்கு விரைவாக நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | 4.494.61 மில்லியன் உறுதிச்சீட்டுகளுக்காக 2021 திசெம்பர் 31 இல் செலுத்த வேண்டியிருந்த, நிறைவு செய்யப்பட வேண்டிய திகதியை மிகைத்து 02 ஆண்டுகள் கடந்திருப்பினும் தொடர்புடைய செயற்திட்டத்திலிருந்து எதிர்பார்க்கப்பட்ட பெறுபேற்றை பெற்றுக் கொள்வதற்கு முடியாதிருந்தது. | பாரியளவில் தாமதித்தல், நாட்டில் காணப்பட்ட பொருளாதார நிலை மற்றும் மின்சார துண்டிப்புக்கள் ஒப்பந்தக்காரரின் நிர்மாணிப்பு பணிகள், விசேடமாக இயந்திர உபகரணங்களை பொருத்துதல், செயற்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொள்ளல் போன்றன முடங்குவதற்கு காரணமாகியது. எவ்வாறாயினும் தற்போது முழு செயற்திட்டத்தில் 87% இற்கு மேற்பட்ட பௌதீக செயன்முறையொன்று பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தது. | |
| (ii) | 04 புகையிரத எஞ்சின் சோடிகள் 2019 திசெம்பர் 31 ஆந் திகதி ரூபா 8.27 மில்லியன் செலவிடப்பட்டு இறக்குமதி செய்யப்பட்டிருந்தது. புகையிரத எஞ்சின்களின் இயந்திர உதிரிப்பாகங்களுக்கு தொடர்புடைய உத்தரவாதக் காலம் 2022 ஆகஸ்ட் 28 ஆந் திகதி காலாவதியாகியிருந்ததுடன் இறக்குமதி செய்து 02 ஆண்டுகள் கடந்திருப்பினும் எதிர்பார்க்கப்பட்ட பணிக்காக பயன்படுத்த முடியாது புகையிரத திணைக்களத்தின் யார்டுகளில் தரித்து வைக்கப்பட்டிருந்ததுடன் ஒரு புகையிரத எஞ்சினின் மேலதிக உதிரப்பாகங்கள் M/S Donfang Electricals International Corporation நிறுவனத்தின் தேசிய முகவர் நிறுவனத்தினால் கழற்றி வேறு புகையிரத எஞ்சினிற்கு பொருத்தப்பட்டிருந்தமை பௌதீக பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது. | நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் செயலாளரினால் 2020 செப்தெம்பர் 18 திகதிய போக்குவரத்து அமைச்சின் செயலாளருக்கு கடிதத்தின் பிரகாரம் கொழும்பு பெருநகர் திண்மக் கழிவு முகாமைத்துவ செயற்திட்டத்தின் செயற்பாட்டு நடவடிக்கைகள் ஆரம்பிக்கும் வரையில் மேற்படி 4 புகையிரத எஞ்சின்கள் இலங்கை புகையிரத திணைக்களத்தின் பயன்பாட்டிற்கு எடுப்பதற்கு அங்கீகாரம் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளது. | குறித்த நோக்கத்தை அடைவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (iii) | அருவக்காலு சுகாதார குப்பை தேக்க செயற்திட்டத்திற்காக 94 கொள்கலன் பெட்டிகள் கொள்வனவு செய்யும் ஒப்பந்தத்தின் பிரகாரம் 2020 ஆம் ஆண்டு இறுதியில் 94 கொள்கலன் பெட்டிகள் பெறுவதற்கிருந்த போதிலும் அவை வழங்கப்பட்ட பின்னர் அப் பெட்டிகளை வைத்துக் கொள்வதற்கு பொருத்தமான இடமொன்று ஒதுக்கப்பட்டிராமையினால் அவை வழங்கல் 2022 ஏப்ரல் 30 ஆம் திகதி வரையில் தாமதமாகியிருந்ததுடன் உடன்பட்ட காலத்தினை பார்க்கிலும் 16 மாதங்கள் தாமதித்திருந்தது. | 2020 ஆகஸ்ட் 23 ஆந் திகதி தொடர்புடைய பெறுகைகள் நிறைவு செய்யப்படல் வேண்டும். கொவிட் 19 நிலையின் காரணத்தினால் 2021 நவம்பர் 11 ஆந் திகதி நடத்தப்பட்ட நிலையான அமைச்சரவை பெறுகைகள் குழுவிடமிருந்து பெறப்பட்ட அங்கீகாரத்தின் பிரகாரம் குறித்த கடனுறுதிக் கடிதத்தின் நீட்டிப்பு 2022 | செலவினம் குறையும் வகையில் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | ஏப்ரல் 30 ஆந் திகதி வரையில் நீட்டிக்கப்பட்டதுடன் 2022 ஏப்ரல் 30 ஆந் திகதி குறித்த 94 கொள்கலன் பெட்டிகள் இந்நாட்டிற்கு கொண்டு வரப்பட்டது. | |
| (iv) | அருவக்காலு சுகாதார குப்பை தேக்க இடத்தின் திட்டங்களின் பிரகாரம் மழை நீர் வெளியே வழிந்தோடுவதற்கு அமைக்கப்பட்டிருந்த கொங்கிரீட் வடிகாலமைப்பு நிர்மாணிக்கப்பட்டு எதிர்காலத்தில் ஏற்படக் கூடிய இடர் நிலைமைகளுக்கு முகங்கொடுப்பதற்காக பொருத்தமான முறைமையொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. அதனால் 2021 நவம்பர் 09 ஆந் திகதி குப்பை தேக்க முற்றம் வெள்ள நீரினால் மூழ்கப்பட்டு இயந்திர உபகரணங்கள் செயலற்றிருந்ததுடன், அச் சந்தர்ப்பத்தில் நிர்மாணிப்புக்கள் சட்ட ரீதியாக கையேற்கப்பட்டிராததுடன் நட்ட சேதம் 2022 ஒக்தோபர் 31 ஆந் திகதி வரையிலும் ஒப்பந்தக்காரரினால் பழைய நிலைக்கு கொண்டு வரப்பட்டிருக்கவில்லை. | அவதானிப்பு ஏற்றுக் கொள்ளப்படுகின்றது. மழை நீர் வழிந்தோடுவதற்கு மாற்று முறைமையொன்று தேடுவதற்கு தற்போது வனாதவில்லுவ பிரதேச செயலாளர், பிரதேச சபையின் தலைவர் மற்றும் மத்திய சுற்றாடல் அதிகார சபை சேர்ந்து நடவடிக்கை எடுத்து வருகின்றது. கழிவு நீர் சுத்திகரிப்பு அமைப்பிற்கு மற்றும் ஆய்வுக்கூடத்திற்கு ஏற்பட்ட சேதத்தினை மீள்நிரப்புவதற்கு தற்போது China Harbour Engineering Co. Ltd. ஆரம்பித்துள்ளதுடன் பழுதுபார்க்கக்கூடிய உபகரணங்கள் பழுதுபார்ப்பதற்கும் எஞ்சிய உபகரணங்கள் அனைத்தும் புதிதாக பெற்றுக் கொடுத்தலும் அவர்களின் காப்புறுதி தொகையில் மேற்கொள்ளப்படும். | இடர் சூழ்நிலைகளை கருத்திற் கொண்டு அரசு சொத்துக்களை பாதுகாக்க வேண்டும். |
| (v) | இலங்கையில் முதலாவது கழிவு நீர் சுத்திகரிப்பு அமைப்பொன்றினால் தயாரிக்கப்பட்ட செயற்திட்டமொன்று என்பதனால் ஒப்பந்த கம்பனியினால் 01 பரிசோதனை (test 01) மேற்கொண்டவுடன் அதற்காக தேசிய நிபுணர்களுக்கு இந்த தொழிநுட்பம் தொடர்பில் பயிற்சியொன்று பெற்றுக் கொடுத்தலும், தேவையான பதவியணி இணைத்துக் கொள்ளலும் மேற்கொள்ளப்பட்டிராததுடன் கணக்காய்வு மேற்கொண்ட 2022 மார்ச் 31 ஆந் திகதி வரையிலும் செயற்திட்டத்தின் செயற்பாட்டு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவும் இல்லை. | கழிவு நீரினை சுத்திகரிப்பதற்கு மேலதிகமாக தேசிய நிபுணர்களுக்காக இந்த தொழிநுட்பம் தொடர்பான பயிற்சியை பெற்றுக் கொடுப்பதற்கு அங்கீகரிக்கப்பட்ட செயற்திட்ட பதவியணியிலிருக்கும் சிரேஷ்ட பதவிகளுக்காக பத்திரிக்கை விளம்பரம் பிரசுரிக்கப்பட்ட போதிலும் அதற்காக தகைமைகளுள்ள நபர்கள் ஆட்சேர்க்கப்பட்டிருக்க-வில்லை. எவ்வாறெனினும் அருவக்காலு மற்றும் களனி | திட்டமிடப்பட்ட பிரகாரம் உரிய காலப் பகுதியிகுள் குறித்த இலக்குகளை பூர்த்தி செய்து செயற்திட்டத்தின் செயற்பாட்டு நடவடிக்கைகளை ஆரம்பிக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | குப்பை இடப்பெயர்வு மத்திய நிலையத்தின் நிர்மாணிப்பு நடவடிக்கைகள் நிறைவு செய்யாமையினால் செயற்திட்டத்தின் செயற்பாட்டு நடவடிக்கைகள் ஆரம்பிப்பதற்கு திறனில்லை. | |
| **(இ)** | **கொள்ளுபிடிய தொடக்கம் தெஹிவல வரை முன்மொழியப்பட்ட பொழுதுபோக்கிற்கான கடற்கரையை நிர்மாணித்தல்.** | | |
| (i) | கொள்ளுபிடிய தொடக்கம் தெஹிவல வரை முன்மொழியப்பட்ட பொழுதுபோக்கிற்கான கடற்கரையை நிர்மாணித்தல் 2017 திசெம்பர் 30 ஆந் திகதி ஆரம்பிக்கப்பட்டு 2023 திசெம்பர் 31 ஆந் திகதி நிறைவு செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் இதற்காக மதிப்பிடப்பட்ட செலவினம் ரூபா 1820.78 மில்லியனாக காணப்பட்டது. செயற்திட்ட சாத்தியவள அறிக்கை மற்றும் சுற்றாடல் பாதிப்பு அறிக்கை 2020 திசெம்பர் 31 ஆந் திகதி நிறைவு செய்யப்பட்டிருந்ததுடன் இதற்காக நீரியல் வள ஆய்வு மற்றும் அபிவிருத்தி முகவர் நிறுவனத்திற்கு (NARA) ரூபா 117.86 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது அமைச்சின் செயற்திட்ட பிரிவு 2020 ஒக்தோபர் 20 ஆந் திகதி மூடப்பட்ட பின்னர் மேல் நடவடிக்கை எடுத்தல் தொடர்பாக நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு கையளிக்கப்பட்டிருந்ததுடன் இதுவரையில் மேல் நடவடிக்கைகள் செயல்படுத்தப்பட்டிருக்கவில்லை. | பதில் பெற்றுக் கொடுப்பதற்கு கால அவகாசம் கோரப்பட்டுள்ளது. | திட்டத்தின் பிரகாரம் செயற்திட்ட செயற்பாடுகள் மேற்கொண்டு அரச தொகை செலவு செய்யும் போது எதிர்பார்க்கப்பட்ட இலக்கினை அடைவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ii) | இந்த செயற்திட்டத்திற்காக காணி சுவீகரிக்கும் போது அபிவிருத்தி மேற்கொள்ளும் பிரதேசங்களுக்குள் குடியிருக்கும் 54 குடும்பங்களின் மீள்குடியேற்றத்திற்கு நகர அபிவிருத்தி அதிகார சபையினால் வீடுகள் பெற்றுக் கொண்டிருந்ததுடன் 35 குடியிருப்பாளர்கள் மட்டும் இந்த வீடுகளில் குடியேறியிருந்தனர். இதற்காக ரூபா 40.42 மில்லியன் நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு செலுத்தப்பட்டிருந்ததுடன் 2021 திசெம்பர் 31 இல் ரூபா 90 மில்லியன் பொறுப்புக்களின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது. | பதில் பெற்றுக் கொடுப்பதற்கு கால அவகாசம் கோரப்பட்டுள்ளது. | காணி சுவீகரித்தல் மற்றும் குடியேற்றல் தொடர்பான சிக்கல்கள் தீர்க்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (iii) | செயற்திட்ட அலுவலகம் பேணிச் செல்வதற்காக 2017 தொடக்கம் 2020 வரை ரூபா 99.37 மில்லியன் செலவிடப்பட்டிருந்ததுடன் 2021 திசெம்பர் 31 இல் ஒட்டுமொத்த பௌதீக செயன் முன்னேற்றம் 47 சதவீதமாக காணப்பட்டது. | பதில் பெற்றுக் கொடுப்பதற்கு கால அவகாசம் கோரப்பட்டுள்ளது. | திட்டமிடப்பட்ட பிரகாரம் செயற்திட்டத்தி-னை நிறைவு செய்தல் மற்றும் எதிர்பார்க்கப்பட்ட இலக்கினை அடைதல் வேண்டும். |

**3.8 கணக்காய்வு ஐயவினாக்களுக்கு பதிலளிக்காமை**

அமைச்சிற்கு வெளியிடப்பட்ட பின்வரும் விரங்கள் குறிப்பிடப்பட்ட கணக்காய்வு ஐயவினாவிற்காக 2022 ஒக்தோபர் 31 ஆந் திகதி வரையிலும் பதில் அனுப்பப்பட்டிருக்கவில்லை.

| | கணக்காய்வு ஐயவினா தொடர்பான விபரம் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மேல் வலய தொழிநுட்ப நகர அபிவிருத்தி செயற்திட்டத்தின் கீழ் போக்குவரத்து உள்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்தல் | பந்திக்கு பதில் பெற்றுக் கொடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2018 .ன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |